**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன நிதி ஆணைக்குழு அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதி ஆணைக்குழு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்பட்டிருக்காமை | 2.3.1 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.6 |
| | | 4. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதிலான குறைபாடுகள் | 2.7 |
| | | 5. செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் | 2.2(ஆ) |
| | | 6. பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.3.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகக் கட்டமைப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்குரியதாக வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், நடைமுறைப்படுத்தும் கால அட்டவணை ஆகியன சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடைவு / பிரதிபலன் மதிப்பீடு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

(i). மாகாண மட்டத்தில் சுய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிகரமாக வருமானம் ஈட்டுதல் தொடர்பில் ஈடுபட்டு மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதியங்கள் தொடர்பில் காணப்படும் சார்புடைய தன்மையை குறைத்தல் தொடர்பில் கவனம் செலுத்தி, நிதி ஆணைக்குழு ‘‘பதிலீட்டு மானியம்’’ அறிமுகப்படுத்தி வருமானம் ஈட்டுவதனை அக்கறைக் கொள்ளச் செய்வதற்கான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசியலமைப்புச் சட்டத்தின் 154(ஐ)(4) பிரமாணத்திற்கமைய மான்புமிகு சனாதிபதிக்கு 2017 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளில் உள்ளடக்கியுள்ளது. மேலும், 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 26 ஆம் இலக்கத்தின் கீழும் இது தொடர்பில் ஆண்டு முழுவதும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய செயன்முன்னேற்ற அறிக்கையில் அது தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii). 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டங்களின் பிரகாரம் ஆணைக்குழுவிற்காக தரவு மற்றும் தகவல் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆசிய மன்றத்தின் நிதி உதவியினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2017

திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii). நிதி ஆணைக்குழு அலுவலக சட்டத்தினை தயாரித்தல் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களின் செயல்நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த அமைச்சரவை பிரமாணக் குறிப்பானது அனுமதிக்காக மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

(i). நிதி ஆணைக்குழு அலுவலகத்திற்கான புதிய அலுவலகக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்குரிய பாதிடப்பட்ட மொத்த நிதியேற்பாடானது ரூபா 300 மில்லியனாக இருந்ததுடன், ரூபா 257.64 மில்லியன் கிரயத்திற்கு கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் தனியார் ஒப்பந்தக் கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2016 நவம்பர் 07 ஆந் திகதியிலிருந்து 2018 சனவரி 30 ஆந் திகதி வரையிலுமான 15 மாதங்களினுள் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2017 திசெம்பர் 27 ஆந் திகதி இடம்பெற்ற 13 ஆவது செயன்முன்னேற்ற மீளாய்வு கூட்டத்திற்கமைய 2017 நவம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 94 நாட்களினுள் நிர்மாணப் பணிகளிலான காலதாமதமொன்று இடம்பெற்றுள்ளதாகவும், செயலாற்றல் அறிக்கைக்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், குறித்த திகதியை விட 109 நாட்கள் தாமதமொன்று ஏற்பட்டிருந்தது.

(ii). உத்தேச கட்டிடத்தின் நிர்மாணத்திற்குரிய காலச் சட்டத்திற்கமைய 2017 திசெம்பர் மாதத்தின் இறுதியளவில் மின்சார உபகரணங்கள் மற்றும் உபபாகங்களை பொருத்துதல், சுத்தகரிப்பு உபகரணங்களை பொருத்துதல், மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்களை பொருத்துவதை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முதலாவது மற்றும் இரண்டாம் தளங்களில் செங்கல்களால் சுவரெழுப்புதல் மற்றும் தரைத் தளத்தில் தச்சுப் பணிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(iii). 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் பணிகள் பழைய கட்டிடத்திலேயே வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், அதற்காக மாதாந்தம் ரூபா 440,000 படியான தாமதமடைந்த 06 மாதக் காலப்பகுதிக்காக குத்தகை வாடகை மற்றும் அரச வரியாக ரூபா 2,640,000 செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

## 2.3 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

ஆணைக்குழு அலுவலகத்தினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய செயற்பட்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 102.32 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 87.37 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 14.95 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 14.62 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3.1 பெறுகைகளை திட்டமிடல்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கோவையின் 4.2.1(அ) இன் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தினால் 2017 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 4.2.1(இ) இன் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 நிதி ஆணைக்குழு அலுவலகத்திற்காக புதிய அலுவலக கட்டிடமொன்றினை நிர்மாணித்தல் தொடர்பான பெறுகை நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11 இன் பிரகாரம் விலைக் கேள்வியாளரினால் மாதிரிப் படிவத்திற்கமைய விலைக் கேள்வி காப்பீடொன்றினை முன்வைக்க வேண்டியதுடன், அது விலைக் கேள்வியின் செல்லுபடியான காலத்தை விட அதிகமானதாக இருக்க வேண்டியதுடன், அந்த மேலதிக காலப்பகுதி விலைக் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் முதல் வெற்றிகரமான விலைக்கேள்வியாளருக்கு செயலாற்றல் பிணையை முன்வைப்பதற்குரிய காலஎல்லையை விட 14 நாட்களால் அதிகமாக இருக்க வேண்டும். வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி காப்பீட்டின் காலமானது 133 நாட்களாக இருக்க வேண்டிய போதிலும், இந்த பெறுகைக்குரியதான விலைக்கேள்வி காப்பீடானது 149 நாட்களாக பத்திரிகை அறிவித்தல் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.10.2 இன் பிரகாரம், ஒப்பந்தத்தின் பெறுமதியானது ரூபா 250,000,000 இற்கு அதிகமாயின் ஒப்பந்தத்தை கையளித்தல் தொடர்பில் கூடுதலாக விற்பனை செய்யப்படும் ஒரு உள்நாட்டு பத்திரிகையில், தேசிய பெறுகைகள் பிரதிநிதித்துவ நிறுவனத்தின் வலைத்தளத்திலும், அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரித்தல் கட்டாயமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி ஆணைக்குழு அலுவலகத்தினால் அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த கொள்வனவிற்காக அமைச்சரவையால் மதியுரை நிறுவனமாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கட்டிட நிர்மாண பீடம் பெயரிடப்பட்டிருந்ததுடன், பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர், அல்லது 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி இருதரப்பினராலும் மதியுரை சேவைகள் தொடர்பில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வாகனப் பயன்பாடு**

ஆணைக்குழுவிற்குச் சொந்தமானதாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உந்துருளி ஒன்று உள்ளடங்கலாக 09 வாகனங்கள் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டினுள் அந்த வாகனங்கள் 28,669 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 331,063 தொகையும், வாகன சேவைப்படுத்தலுக்காக ரூபா 150,195 தொகையும், வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 1,088,585 தொகையும், வாகனக் காப்பீட்டிற்காக ரூபா 418,643 தொகையுமாக ரூபா 1,988,486 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய ஆணைக்குழுவினால்

வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளங்கள் மற்றும் படிகள் நீங்கலாக ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 69 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

---

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கமைய 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2018 மே 01 ஆந் திகதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கைகளுக்கமைய பொருட் பதிவேட்டு பட்டியல் மீதி, உள்ளபடியான மீதியுடன் இணக்கம் செய்யும் போது 35 பொருட் விடயங்களின் 198 அலகுகள் மிகையாக காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ii) பிரிவுகளுக்கு வெவ்வேறாக பொருட் பதிவேட்டு புத்தகங்கள் பேணப்படாதிருந்ததுடன், நிறைவேற்று மேசைகள், எழுதுநர் மேசைகள், கலந்துரையாடல் மேசைகள், உருக்கு மேசை என தனித்தனியாக மேசைகள் பதிவேட்டிற்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.5 நிலைபேறான அபிவிருத்தி**

---

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பான அறிவுறுத்தலின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் தமது விடயப்பரப்பிற்கமைய அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்களை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் மாகாண சபைகள் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான இலக்குகள், அடைந்து கொள்ள வேண்டிய மைல்கற்கள் போன்று செயன்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவுவகை | தேறியநிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபாமில்லியன் | ரூபாமில்லியன் | ரூபாமில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 41.34 | 32.04 | 9.30 | 22.49 |
| | மூலதனம் | 4.80 | 0.77 | 4.03 | 83.95 |
| | **மொத்தம்** | **46.14** | **32.81** | **13.33** | **28.86** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டுவருபவை | 36.62 | 32.99 | 3.63 | 9.91 |
| | மூலதனம் | 4.10 | 1.70 | 2.40 | 58.53 |
| | **மொத்தம்** | **40.72** | **34.69** | **6.03** | **14.80** |
| 2015 | மீண்டுவருபவை | 38.50 | 36.03 | 2.47 | 6.41 |
| | மூலதனம் | 4.50 | 2.02 | 2.48 | 55.11 |
| | **மொத்தம்** | **43.00** | **38.05** | **4.95** | **11.51** |
| 2016 | மீண்டுவருபவை | 44.69 | 43.68 | 1.01 | 2.26 |
| | மூலதனம் | 203.00 | 70.55 | 132.45 | 65.25 |
| | **மொத்தம்** | **247.69** | **114.23** | **133.46** | **53.88** |
| 2017 | மீண்டுவருபவை | 50.16 | 48.28 | 1.88 | 3.75 |
| | மூலதனம் | 102.90 | 87.84 | 15.06 | 14.64 |
| | **மொத்தம்** | **153.06** | **136.12** | **16.94** | **11.07** |

கடந்த 04 வருடங்களினதும் மூலதனச் செலவினங்களை கவனத்திற் கொள்ளும் போது 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய 04 வருடங்களில் முறையே 83.95, 58.53, 55.11 மற்றும் 65.25 சதவீதமான போதிலும், மூலதன செலவினங்களுக்கான நிதியேற்பாட்டில் பாதிக்கும் மேற்பட்ட அளவானது சேமிக்கப்பட்டிருந்தமையை காணக்கூடியதாக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் போது அந்த நிலைமையானது 15 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறு மூலதன செலவினங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடானது கடந்த ஆண்டுகளுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின்போது 49 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

மீளாய்வாண்டின் போது செலவின விடயமொன்றிற்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணத்தால் ஆண்டினுள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பானது தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக 15 சதவீதம் அல்லது ரூபா 14,871,354 ஆக இருந்தது.

## 2.7 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டிற்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரிய கட்டுநிதிகள் மற்றும் கிடைக்கப்பெற்ற கட்டுநிதிகள் ஆகியவற்றை பரீட்சிக்கும் போது ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டிற்கு பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட கட்டுநிதியானது ரூபா 154.39 மில்லியனாக இருந்ததுடன், கோரிய கட்டுநிதியானது ரூபா 252.25 மில்லியன் ஆனமையால் திட்டமிடப்பட்ட கட்டுநிதியை மிகைத்து கோரல் ரூபா 97.86 மில்லியன் அல்லது 63 சதவீதமாகும்.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவினம்

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 30.11 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருடாந்த ஆளணி வேதன செலவினம் ரூபா 654,494 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | **ஆளணிவகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 15 | 10 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 44 | 25 | 19 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 14 | 09 | 05 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | **மொத்தம்** | 77 | 47 | 30 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் ஊழியர் எண்ணிக்கையானது 77 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 47 ஆனமையால் 30 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்களின் எண்ணிக்கை 5 ஆகும். அது ஒரு பணிப்பாளரையும் 4 பிரதிபணிப்பாளர்களையும் கொண்டதாகும்.

(ii) அவ்வாறே ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை 4 ஆக இருந்ததுடன், சபையின் நிறுவனக் கட்டமைப்பிற்கமைய 5 பணிப்பாளர் பதவிகள் நிலவின. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்படும் பிரதி பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கையானது 7 ஆக இருந்ததுடன், நிறுவனக் கட்டமைப்பிற்கமைய பதவிகளின் எண்ணிக்கை 5 ஆகும்.

(iii) ஆணைக்குழுவின் மூன்றாம் நிலையிலான 19 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிகள் 5 இற்காகவும் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை.